**செய்தி வெளியீட்டு எண்: 95** **நாள்: 11.08.2022**

# ஆளுநர் மாளிகை அறிவிப்பு

## இந்தியாவின் 75ஆம் ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி (சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா) பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

இந்தியாவின் 75 ஆம் ஆண்டு சுதந்திர தினத்தையொட்டி (சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா), பள்ளி/கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கட்டுரைப் போட்டியின் வெற்றியாளர்களை ஆளுநர் மாளிகை அறிவித்துள்ளது.

இந்தியாவின் 75வது சுதந்திர தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 2022ஆம் ஆண்டு ஜூலை 15 ஆம் நாள் பள்ளி (6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை) மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் மாநில அளவிலான கட்டுரைப் போட்டி அறிவிக்கப்பட்டது. பள்ளி அளவிலான மாணவர்களுக்கான கட்டுரைத் தலைப்பு **“நான் விரும்பும் சுதந்திரப் போராட்ட வீரர்”** (தமிழ்), **“My favourite Freedom Fighter”** (ஆங்கிலம்). கல்லூரி/பல்கலைக்கழக அளவிலான மாணவர்களுக்கான கட்டுரைத் தலைப்பு **“2047-ல் இந்தியா”** (தமிழ்) **"India by 2047"** (ஆங்கிலம்) என்றும் அளிக்கப்பட்டிருந்தன.

தமிழ்நாடு முழுவதிலும் இருந்து பலநூறு மாணவர்கள் கட்டுரைகளை எழுதியனுப்பியிருந்தனர். அக்கட்டுரைகளை மதிப்பிட்ட வல்லுநர் குழு இந்தப் போட்டிக்கு மாணவர்களிடையே நல்ல வரவேற்பு இருந்தாகவும், வரப்பெற்ற கட்டுரைகள்

சிந்தனையைத் தூண்டும் விதமாகவும், உயர்தரமாகவும் இருந்தன ?ன்றும் குறிப்பிட்டுள்ளனர். வல்லுநர் குழு பரிந்துரைத்த தகுதிப் பட்டியலில், வெற்றியாளர்களின் விவரங்கள் பின்வருமாறு:

**பள்ளி மாணவர்கள்**

**தமிழ்**

| ?.?. | பரிசு விவரம் | மாணவர் பெயர் | பள்ளி முகவரி |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | ? . மதுநிஷா | பதினொன்றாம் வகுப்பு<br>நேஷ்னல் அகாடமி ICSE பள்ளி,<br>பட்டிணம் காத்தான், இராமநாதபுரம் |
| 2. | இரண்டாம் பரிசு | ?. ஜீவிதா | பத்தாம் வகுப்பு<br>இரமணமகரிஷி பதின்ம மேல்நிலைப் பள்ளி,<br>காவேரியாம்பூண்டி, திருவண்ணாமலை மாவட்டம் |
| 3. | மூன்றாம் பரிசு | S.M. விகாஷ் குமார் | பத்தாம் வகுப்பு, ஆதர்ஷ் வித்யா கேந்திரா<br>வேட்டூர்ணிமடம், நாகர்கோவில்<br>கன்னியாகுமரி மாவட்டம் |

**ஆங்கிலம்**

| ?.?. | பரிசு விவரம் | மாணவர் பெயர் | பள்ளி முகவரி |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | ஜியா அருண் | 9ஆம் வகுப்பு, Billabong High International School (BHIS), கேளம்பாக்கம், சென்னை |
| 2. | இரண்டாம் பரிசு | வி. காவியா | 10ஆம் வகுப்பு, குண்டூர் சுப்பையா பிள்ளை, தி.நகர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தி.நகர், சென்னை |
| 3. | மூன்றாம் பரிசு | பி. தர்ஷன் | 9ஆம் வகுப்பி, சிவானந்த ராஜாராம் மேல்நிலைப் பள்ளி, மறைமலைநகர், செங்கல்பட்டு |

## கல்லூரி/பல்கலைக்கழக மாணவர்கள்

### தமிழ்

| ? .?. | பரிசு விவரம் | மாணவர் பெயர் | பள்ளி முகவரி |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | சீ. அபிநயா | மூன்றாம் ஆண்டு இளங்கலைத் தமிழ், ? .? .? . கல்லூரி, மன்னம்பந்தல், மயிலாடுதுறை |
| 2. | இரண்டாம் பரிசு | ரா. பத்மவர்ணா | பொறியியல் நான்காம் ஆண்டு கோவை தொழிநுட்பக் கல்லூரி |
| 3. | மூன்றாம் பரிசு | S. ஜோதிராம் | முதுகலைக் கணிதம் இரண்டாம் ஆண்டு, மதுரை காமராஜர் பல்கலைக்கழகக் கல்லூரி, மெங்கில்ஸ் ரோடு, திண்டுக்கல் |

### ஆங்கிலம்

| ? .?. | பரிசு விவரம் | மாணவர் பெயர் | பள்ளி முகவரி |
|---|---|---|---|
| 1. | முதல் பரிசு | எம்.த்ரிஷா | இளங்கலை (பொது நிர்வாகம்), இரண்டாம் ஆண்டு, ? .எம். ஜெயின் கல்லூரி, மீனம்பாக்கம், சென்னை |
| 2. | இரண்டாம் பரிசு | அக்ஷயா ரோஹித் | பி.டெக்.(கணினி அறிவியல்), ? ரண்டாம் ஆண்டு, சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழகம், கும்பகோணம் |
| 3. | மூன்றாம் பரிசு | எஸ்.கிருத்திகா | இளங்கலை அறிவியல் (வேதியியல்), மூன்றாம் ஆண்டு, மீனாட்சி மகளிர் கல்லூரி, கோடம்பாக்கம், சென்னை. |

கல்லூரி அளவிலான போட்டியில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ.1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம்), ரூ.75,000 (ரூபாய் எழுபத்தைந்தாயிரம்) மற்றும் ரூ. 50,000 (ரூபாய் ஐம்பதாயிரம்) ரொக்கப் பரிசுகள் வழங்கப்படும். பள்ளி அளவிலான போட்டியில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே ரூ.75,000 (ரூபாய்

எழுபத்தைந்தாயிரம்), ரூ. 50, 000/- (ரூபாய் ஐம்பதாயிரம்) மற்றும் ரூ. 25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) வழங்கப்படும்.

15 ஆகஸ்ட் 2022 அன்று சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்கள் மற்றும் பள்ளிகள்/கல்லூரிகளின் முதல்வர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்.

---

ஆளுநர்மாளிகை, சென்னை-22 ஒம்/-

11.08.2022 இணை இயக்குனர்(ம.தொ )